


# குழந்தைப் பாடல்கள்

மா. இராசமாணிக்கனார்

# குழந்தைப் பாடல்கள்

டாக்டர். மா. இராசமாணிக்கனார்,
M A., L.T., M.O.L., Ph. D.

சாந்தி நூலகம்
2/122, பிராட்வே • சென்னை-1.

சாந்தி வெளியீடு: 22
முதற் பதிப்பு: செப்டம்பர், 1960

விலை ரூ. 0-75

SANTHI NOOLAGAM
PUBLISHERS & BOOK-SELLERS
2/122, BROADWAY, MADRAS-1

பாரதி பிரிண்டர்ஸ், 119, பிராட்வே, சென்னை-1

# முகவுரை

முதல் ஐந்து வகுப்புக்களில் படிக்கும் சிறுவர் சிறுமியர்க்கு ஏற்ற ஆட்டப்பாடல்கள், செயல் முறைப்பாடல்கள், கதைப்பாடல்கள், வளர்ப்புப் பாடல்கள் மிகுந்த அளவில் தேவைப்படுகின்றன. இக்குறையை நீக்கச்சிலர் முயன்றுவருகின்றனர். அம்முயற்சியில் இது ஒரு பகுதியாகும்.

யான் முப்பது ஆண்டுகளாக முதல் ஐந்து வகுப்புக்களுக்குரிய தமிழ்ப்பாட நூல்கள் பல வற்றை எழுதி வருபவன் என்பது தமிழ் உலகம் அறிந்த செய்தியாகும். அந்த அநுபவத்தின் பயனாக இப்பாடல்கள் வெளிவந்தவை. அண்மையில் வெளிவந்த புதிய பாடத்திட்டத்தின் படி இப்பாடல்கள் யாக்கப் பெற்றவையாகும். இப்பாடல்கள் சிறுபிள்ளைகளுக்குப் பயன்பட வேண்டும் என்பதே எனது ஆவல்.

இராசமாணிக்கனார்


# பதிப்புரை

இந்நூலாசிரியர் திரு. டாக்டர் மா. இராச மாணிக்கனார் அவர்களைத் தமிழ் மாணவ மாணவியருள் அறியாதோர் மிகச் சிலரே என்னலாம். ஏனெனில் அவர்கள் நீண்டகாலமாகவே பள்ளிக் குழந்தைகளுக்கெனப் பாடல்களும் கதைகளும் எழுதி வந்துள்ளார்கள். அவற்றின் ஒருபகுதியே இங்கு இப்புத்தகமாக்கித் தரப்பட்டுள்ளது.

இதனை எங்கள் நூலகத்தின் வாயிலாக வெளியிட உரிமையளித்த ஆசிரியர் அவர்களுக்கும், சிறந்த முறையில் சித்திரங்கள் வரைந்து உதவிய ஆர்ட்ஸ்சொஸைட்டியாருக்கும், அழகாக அச்சிட்டுத் தந்த பாரதி பிரிண்டர்ஸ் அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்நூலினைத் தமிழ்நாட்டுச் சிறுவர் சிறுமியர் அனைவரும் படித்துப் பயனடைவர் என நம்புகிறோம்.

சென்னை
1—9—'60

சாந்தி நூலகத்தார்




## எங்கள் விருப்பம்

வாழ்க எங்கள் தமிழ்நாடு

வளர்க எங்கள் தமிழ்மொழியே

உழவர் உழைப்பைப் போற்றிடுவோம்


உளதொழில் யாவும் செய்திடுவோம்

வாணிகம் நாளும் வளர்த்திடுவோம்

வளமாய் வாழ்க்கை வாழ்ந்திடுவோம்

கல்வி ஒழுக்கம் உயர்த்திடுவோம்

கடவுளை நாளும் தொழுதிடுவோம்.



## விளையாட்டுகள்

மணல் வீடு கட்டுவோம்

மாக் கோலம் போடுவோம்

மல்லி கைப்பூ கொண்டுவா

மாலை கட்டிச் சூடலாம்

சிறிய சோறு சமைப்போம்

சிரித்துப் பேசி உண்போம்

பெரிய வர்கள் பார்த்தே

பேசி மகிழச் செய்வோம்

நாளும் இப்படி ஆடுவோம்

நலமாய்க் கூடிப் பாடுவோம்


நாளும் பாடம் படிப்போம்

நன்றாய் ஆட்டம் ஆடுவோம்.



## விளையாட்டுகள்

பந்தாட் டம்நாம் ஆடிடுவோம்
பாடிப் பாடி ஆடிடுவோம்
கோலாட் டம்நாம் ஆடிடுவோம்
குதித்துக் குதித்தே ஆடிடுவோம்
ஊஞ்சல் ஆட்டம் ஆடிடுவோம்
ஊக்க மாய்விளை யாடிடுவோம்
ஓடுவோம் தாண்டுவோம் ஓய்ந்திருப்போம்
ஒற்றுமை யாக வாழ்ந்திடுவோம்.



## விளையாட்டுகள்

சடுகுடு ஆட்டம் ஆடுகிறோம்

சண்டை இடாமல் ஆடுகிறோம்

கால்பந்து கைப்பந்து கண்பொத்தி

கண்ணும் பூச்சி ஆடுகிறோம்

ஓடுகி றோம்பின் தாண்டுகிறோம்


ஆடுகி றோம்பின் பாடுகிறோம்

ஒற்றுமை யாகப் படிக்கின்றோம்

ஒன்றாய் நாடகம் நடிக்கின்றோம்

கடவுளை நாளும் வணங்குகிறோம்

கருத்துடன் கடமைகள் செய்கின்றோம்.




# ரயில் வண்டி ஆட்டம்

போகுது பார்எம் ரயில்வண்டி
போகுது போகுது போகுதுபார்
குப்குப் என்றே புகைவிடுமே
கூகூ என்றே கூவிடுமே
கந்தன் தான்இங்கு ரயில்எஞ்சின்
கண்ணன் தான்இங்குக் காவல்வண்டி
கமலம் தான்கை காட்டிமரம்
கண்ணம் மாள்ரயில் காவலாரம்
குப்பா வழியில் நில்லாதே
தப்பா துன்மேல் ரயில்ஏறும்
வண்டிச் சக்கரம் உருள்வதைப்பார்
வண்டி விரைந்து போவதைப்பார்
எங்கள் வண்டி ரயில்வண்டி
எல்லா வூர்க்கும் போம்வண்டி
போகுது பார்எம் ரயில்வண்டி
போகுது போகுது போகுதுபார்.



## காகிதக் கப்பல்

காகிதக் கப்பல் செய்திடுவோம்
    கனத்த மழையில் விட்டிடுவோம்
தெருவில் தண்ணீர் போகிறது
    திலகா ! கப்பலை விட்டிடுவாய்
நானும் கப்பலை விடுகின்றேன்
    நங்காய் ! கப்பலை விடுவாயே
ஆ ! ஆ ! எங்கள் கப்பல்கள்
    அழகாய்ப் போவதைப் பாருங்கள்
கடலில் கப்பல்கள் போவதுண்டு
    கப்பலில் மக்கள் போவதுண்டு
காகிதக் கப்பல் எம்கப்பல்
    களிப்பாய் நீரில் போம்கப்பல்
கப்பல் காகிதக் கப்பலடி
    கடலைத் தாண்டுமோ சொல்லடிநீ
கப்பல் விட்டே ஆடுவமே
    களிப்புடன் பாடி ஆடுவமே.




## கயிறு இழுத்தல்

கயிற்றை இழுப்போம் வாருங்கள்
கருத்தாய் வெற்றி பாருங்கள்
கண்ணன் கந்தன் கோபாலன்
பண்ணன் முருகன் கோவிந்தன்
இந்த அறுவரும் ஒருகட்சி
அந்த அறுவரும் ஒருகட்சி
வரதன் கபிலன் நக்கீரன்
பரணன் பாலன் பரந்தாமன்
எதிரெதிர் நின்றே இழுத்திடுங்கள்
எவர்தாம் வெல்வர் எனப்பார்ப்போம்
இப்படிச் சொல்லி ஆசிரியர்
இருவர்க் கிடையில் நிற்கின்றார்


கண்ணன் கட்சியார் இழுக்கின்றார்
வரதன் கட்சியார் இழுக்கின்றார்
இழுத்து இழுத்தே பார்க்கின்றார்
இழுங்கள் இழுங்கள் என்கின்றார்
சாய்ந்து சாய்ந்தே இழுக்கின்றார்
ஓய்ந்து விடாமல் இழுக்கின்றார்
இரண்டு கட்சியார் போட்டியிட்டே
இழுத்து இழுத்தே பார்க்கின்றார்
முன்னும் பின்னும் இழுக்கின்றார்
மூச்சுப் பிடித்தே இழுக்கின்றார்
இழுங்கள் என்றே ஆசிரியர்
இருதிறத் தார்க்கும் உரைக்கின்றார்
இழுப்பதால் கையோ வலிக்கிறது
எனினும் விடாமல் இழுக்கின்றார்
கண்ணன் கட்சியார் இழுத்துவிட்டார்
கவிழ்ந்தனர் வரதன் கட்சியினர்
வென்றவர் பரிசு பெற்றனரே
அன்றவர் மகிழ்ச்சிக் களவேது?






## படிப்பும் விளையாட்டும்

பலவூர்ப் பிள்ளைகள் வாழ்கின்றோம்
பாங்காய்ப் பாடம் படிக்கின்றோம்
கண்கட்டி நாங்கள் ஆடுகிறோம்
கால்பந் தாட்டம் ஆடுகிறோம்
பச்சைக் குதிரை ஆடுகிறோம்
பம்பரம் போலச் சுழலுகிறோம்
ஒற்றுமை யாக ஆடுகிறோம்
ஒன்றாய்க் கூடிப் பாடுகிறோம்
கடவுளை நாளும் வணங்குகிறோம்
கருத்தாய்க் கடமைகள் செய்கின்றோம்.



## தாலாட்டு

ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ
தங்கச் சிலையே
தளிரே இளநிலவே
மங்காத பேரொளியே
மரகதமே கண்வளராய்
மல்லிகைப் பூமணமே
மதுரை நகர்அழகே
அல்லிக் கொடிப்பூவே
அழகனே கண்வளராய்
மண்ணரசே மாமணியே
மாணிக்கச் செல்வமே
கண்கவரும் ஓவியமே
கண்மணியே கண்வளராய்.



# தாலாட்டு

ஆராரோ ஆராரோ

ஆரிரரோ ஆராரோ

முல்லைக்குத் தேர்கொடுத்த

மூதறிஞன் நீதானே

மயிலுக்குப் போர்வை

மகிழ்ந்தளித்தோன் நீதானே

இளைஞன் இவன்என்றே

ஏங்கி இருந்தவர்க்கு

முதியனாய்த் தோன்றி

முறையளித்தோன் நீதானே


ஏழரசர் வந்தாலும்

எதிர்த்தழிப்பேன் என்று சொல்லி

எழுவரையும் தோற்கடித்த
　　எழிலரசன் நீதானே
காவிரிக்குக் கரையிட்ட
　　கரிகாலன் நீதானே
பூவிரிந்த சோலையிலே
　　பொங்குமணம் நீதானே
அம்மைக்கு அருநெல்லி
　　அளித்தவனும் நீதானே
ஐயற்குப் பாம்பாடை
　　அளித்தவனும் நீதானே
மறத்தமிழன் மரபினிலே
　　மகிழ்ந்துதித்த என்மகனே
அறநெறியைக் காத்திடுவாய்
　　ஆணழகா கண்வளராய்.


---

முதறிஞன்—பாரி வள்ளல். மயிலுக்குப் போர்வை அளித்தவன்—பேகன். முறையளித்தோன்—நீதி வழங்கியவன் கரிகாலன். எழிலரசன்—பாண்டியன்; சேர சோழரையும் சிற்றரசர் ஐவரையும் ஒரே காலத்தில வென்றவன்; தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். அம்மை-ஔவையார். இவர்க்குக் கருநெல்லி கொடுத்தவன் தகடூர் அதியமான். ஐயன்—சிவபெருமான். ஆய்வேள் பாம்பாடையைச் சிவலிங்கத்திற்குக் கொடுத்தவன். மறம்—வீரம்.



## தாலாட்டு

ஆராரோ ஆராரோ
ஆரிரரோ ஆராரோ
கண்ணே கருமணியே
கற்பகமே கனிரசமே
மண்ணிற் பிறந்த
மாமணியே கண்வளராய்
பாண்டிக் கடல்முத்தே
பவளமே என்னுடைய
வேண்டுதல் தீர்க்கவந்த
வேந்தனே கண்வளராய்
தூங்கிஎழு பால்தருவேன்
தோகைமயில் வான்கோழி
பாங்குடனே ஆடுவதைப்
பார்த்திடலாம் கண்வளராய்.



## வெண்ணிலா

பால்போல் வெளுத்திருக்கும் வெண்ணிலாவே—நீ

பகற்பொழுதில் எங்கிருந்தாய் வெண்ணிலாவே

இரவில் வருவதேனோ வெண்ணிலாவே—உனக்(கு)

இன்பம் தரும்பொழுதோ வெண்ணிலாவே

தனியே இருப்பதேன் வெண்ணிலாவே—இந்தத்

தரையிலே வந்திடுநீ வெண்ணிலாவே


எங்களுடன் போட்டியிட்டு வெண்ணிலாவே—நீ


இன்பமுற ஆடிடலாம் வெண்ணிலாவே

பாலும் பழமும்இந்தா வெண்ணிலாவே—உனக்குப்

பாங்காக யான்தருவேன் வெண்ணிலாவே

அல்லியம்மாள் உனைக்கண்டு வெண்ணிலாவே—மிக்க
அன்புகொண்டு ஆடுகிறாள் வெண்ணிலாவே
பலமுறை அழைக்கின்றேன் வெண்ணிலாவே—நீ
ஒருமுறை வாராயோ வெண்ணிலாவே
உனைக்கண்டு உலகமே வெண்ணிலாவே—ஆ! ஆ!
உள்ளம்பூ ரிப்பதேன் வெண்ணிலாவே
மேலோரை வேண்டினால் வெண்ணிலாவே—அவர்
கீழோர்க் கிரங்குவரே வெண்ணிலாவே
மேலோர் வரிசையினில் வெண்ணிலாவே—நீ
மேவியவன் அல்லவோ வெண்ணிலாவே.





## பூப்பாட்டு

இதுதான் எங்கள் பூந்தோட்டம்
இவைதாம் எங்கள் பூஞ்செடிகள்
நீரில் மலர்வது தாமரைப்பூ
நிலத்தில் மலர்வன பலபூக்கள்
தோட்டத்தில் இருப்பது தாழம்பூ
தொடுத்து முடிப்பது மல்லிகைப்பூ.
இன்பம் தருவது இருவாட்சி
எனக்கு விருப்பம் செந்தாமரை
அழகில் சிறந்தது செந்தாமரை
மணத்தில் சிறந்தது மல்லிகைப்பூ
தமிழரசி தாழம்பூ
மங்கையர்க்கரசி மல்லிகைப்பூ

இசைஅரசி இருவாட்சி
    சிவஅரசி செந்தாமரை
நீ என்ன பூ? தாழம்பூ
    நீ என்ன பூ? மல்லிகைப்பூ
நீ என்ன பூ? இருவாட்சி
    நீ என்ன பூ? செந்தாமரை
பூ எடுத்து ஆடுவோம்
    பூப்பாட்டுப் பாடுவோம்.






## பொம்மைக் கடை

இதுதான் பொம்மைக் கடையாகும்
இதிலுள பொம்மைகள் பலவாகும்
ராஜா பொம்மையைப் பாரடிநீ
ராணி பொம்மையைப் பாரடிநீ
கண்ணன் பொம்மையைப் பாரடிநீ
கண்ணுக் கழகாய் இருப்பதைப்பார்
இதுதான் தஞ்சா வூர்ப்பொம்மை
இங்கிதன் வயிற்றைப் பாரடிநீ
இதுதான் உருட்டுப் பொம்மையடீ
இதுதான் எனக்கு வேண்டுமடீ
கொம்புள ஆட்டுப் பொம்மையைப் பார்
கொம்புள காண்டா மிருகம்பார்

நீரில் வாழும் முதலையைப்பார்
நீண்ட கொம்புடை மானைப்பார்
வாயைப் பிளக்கும் புலியைப்பார்
தாயைப் பிரியாக் கன்றைப்பார்
மரத்தைக் குறிக்கும் பொம்மையைப்பார்
மரத்தில் மந்திகள் இருப்பதைப்பார்
துதிக்கையைத் தூக்கும் யானையைப்பார்
துடுக்காய்ப் பார்க்கும் குரங்கைப்பார்
சிங்கத்தின் பிடரி மயிரைப்பார்
சிவந்த முகத்துக் குரங்கைப்பார்
பொம்மைகள் எல்லாம் வாங்குவமே
பொம்மைக் கொலுவைத் தாடுவமே.




## சின்ன மாமா

மதுரைக்குப் போகின்ற சின்ன மாமா—நீ
மயங்காமல் சொல்வதைக்கேள் சின்ன மாமா
காஞ்சிபுரச் சேலேவேண்டும் சின்ன மாமா—நம்
காவேரி மாமிக்குச் சின்ன மாமா
மதுரைச் சுங்கடிச்சேலே சின்ன மாமா—நம்
மங்கம்மாள் பாட்டிக்குச் சின்ன மாமா
அப்பாவுக்குப் பட்டுவேட்டி சின்ன மாமா—நீ
அழகாக வாங்கிவாராய் சின்ன மாமா
தாயாருக்குப் பட்டுச்சேலே சின்ன மாமா—நீ
தயங்காமல் வாங்கிடுவாய் சின்ன மாமா
அண்ணுவுக்கு ஊற்றுப்பேணு சின்ன மாமா—நீ
அழகாக வாங்கிடுவாய் சின்ன மாமா
அக்காவுக்குப் பாவாடை சின்ன மாமா—நீ
பக்குவமாய்ப் பார்த்துவாங்கு சின்ன மாமா
தம்பிக்குச் சைக்கிள்வண்டி சின்ன மாமா—ஒன்று
தட்டாமல் வாங்கிவா சின்ன மாமா

குழந்தைக்கு ரப்பர்பொம்மை சின்ன மாமா—நீ
கூசாமல் வாங்கிவா சின்ன மாமா
கைக்குக்கடி காரம்வேண்டும் சின்ன மாமா—எனக்குக்
கட்டாயும் வாங்கிவா சின்ன மாமா
இத்தனையும் வாங்கிவந்தால் சின்ன மாமா—உன்னை
இன்பமாய் வரவேற்போம் சின்ன மாமா
இத்தனையும் வாங்காவிடில் சின்ன மாமா—உன்னை
எட்டியும் பாரோமே சின்ன மாமா.





## நரியும் ஆடும்

"ஆ! ஆ! இந்தக் காட்டினிலே
அழகு மிகுந்த பழங்களுண்டே
கதிரவன் வெளிச்சம் தெரியாமல்
காட்டில் மரங்கள் அடர்ந்துளவே
என்னே இந்தக் காட்டழகு!
என்பசிக் கான பழங்களுண்டு,"
இப்படிச் சொல்லிச் சென்றநரி
தொப்பெனக் கிணற்றில் வீழ்ந்ததுவே.
"வழியைப் பார்த்து நடவாமல்
வந்ததால் வந்த விணையாகும்
எப்படித் தப்புவோம் இதிலிருந்தே"
எனநினைந் தேக்கம் கொண்டதுவே.

எட்டிப் பார்த்தது ஓர் ஆடு :
"எப்படித் தண்ணீர் இருக்கிறது?
குடிக்க நமக்குப் பயன்படுமா?
குதித்து நானும் வரலாமா?"
என்று கேட்டது எழில்ஆடு.
"நன்ருய் வரலாம் ; வாருங்கள் ;
தண்ணீர் குடித்தே மகிழுங்கள்;
தண்ணீர்ச் சுவையைப் பாருங்கள்,"
என்றது நரிதான் தந்திரமாய்.
ஏமாந் தாடு குதித்ததுவே.
உடனே ஆட்டின் மீதேறி
உவப்புடன் கிணற்றின் மேலேறி
நரிதான் சென்றது. "ஐயோ ! நான்
நரியின் சொல்கேட் டேமாந்தேன்"
என்று வருந்திக் கிணற்றுள்ளே
ஏங்கி இருந்தது எழிலாடே.

## கண்ணன் - நல்ல பையன்

கண்ணன் காலையில் எழுந்திடுவான்

கருத்தாய்க் கடவுளைத் தொழுதிடுவான்

குளிர்ந்த நீரில் குளித்திடுவான்

குளித்தபின் பாடம் படித்திடுவான்

வீட்டுக் கணக்கைச் செய்திடுவான்

விரும்பிக் கையெழுத் தெழுதிடுவான்

தாயார் சொல்லும் வேலைகளைத்

துள்ளிக் குதித்தே செய்திடுவான்

தந்தையார் வேலை சொன்னாலும்

தமையன் வேலை சொன்னாலும்

வீட்டு வேலை என்றாலே

விருப்புடன் செய்வான் தன்னாலே

பள்ளியில் பாடங்கள் படித்திடுவான்

பாட்டுகள் பலவும் ஒப்புவிப்பான்

தோட்ட வேலை செய்திடுவான்

தோழர்களோடே ஆடிடுவான்

எவரையும் சினந்து பேசானே

எவரையும் வருத்தி ஏசானே

பள்ளிக்குத் தவருமல் வந்திடுவான்

பள்ளிஆசிரியர் மகிழ்ந்திடுவார்

கண்ணன் என்ருல் எல்லோரும்


கனிவுடன் பேசி வாழ்த்திடுவர்

பிள்ளைகள் எல்லாம் பிள்ளைகளா?

பிள்ளை ஒருவனே கண்ணனென்பார்

இப்பெயர் பெறுவது எளிதன்று

இப்பெயர் பெறுவதே ஏற்றமன்ரே?



## நரியும் திராட்சையும்

காட்டில் ஒருநரி அலேந்ததுவே
கருத்தாய்த் திராட்சையைக் கண்டதுவே
வேட்கை தீரத் திராட்சையையே
விரும்பித் தின்ன நினேத்ததுவே
தாவிப் பறிக்க முயன்றதுவே
தாவித் தாவிச் சலித்ததுவே
“வேண்டாம் இந்தப் பழம்புளிக்கும்
வேறு திராட்சைப் பழம்இனிக்கும்
அதனேப் பறித்துத் தின்பேனே
இதனேப் பறித்து என்பயனே !”
என்று மொழிந்தே ஏகிற்றே
அன்றதன் சூழ்ச்சி போயிற்றே.

## மேற்கு மலைத் தொடர்

இதுதான் மேற்கு மலைத்தொடராம்
இதுமிக நீள மலைத்தொடராம்

மலைக்கும் மலைக்கும் நடுவினிலே
பள்ளத் தாக்குகள் பலவுண்டு

வான ளாவிய மரங்களுண்டு
தேன ருவிகள் பலவுண்டு

காவிரி வைகை பெரியாறு
கவின்பெறு பொருநை யாறுகளும்

பிறப்ப திந்த மலைத்தொடரில்
மறக்க முடியுமோ, இத்தொடரை?

வாழைத் தோட்டம் பலவுண்டு
பலாத் தோப்பு மிகவுண்டு

ஆரஞ் சுப்பழத் தோட்டமுண்டு
ஆட்டை விழுங்கும் பாம்புண்டு

கரடி யானை மானுண்டு
காட்டுப் பசுக்கள் பலவுண்டு

நாய்கள் நரிகள் பலவுண்டு
பாய்புலி கரடி இங்குண்டு

சந்தனம் அகில்முதல் மரங்களுண்டு
இந்தன மரங்களும் இங்குண்டு

காப்பி தேயிலைத் தோட்டங்கள்
கனிகள் தந்திடும் தோட்டங்கள்

உண்டு பலவும் மலைத்தொடரில்
ஊர்களும் உண்டு மலைத்தொடரில்

தாரிட்ட பாதைகள் அங்குண்டு
தங்கிட வளமனை அங்குண்டு

ஆயிரக் கணக்கில் தொழிலாளர்
அங்குளர் தோட்ட வேலைகளில்

உருளை முதலிய கிழங்குவகை
மிளகு முதலிய கொடிவகைகள்

யாவும் உண்டு மலைமீதே
மலைவளம் சொல்ல இயலாதே.

## கடவுள் யார்?

கிளிக்குப் பசுமை கொடுத்தவர் யார்?
காக்கைக்குக் கருமை கொடுத்தவர் யார்?
குருதிக்குச் சிவப்புக் கொடுத்தவர் யார்?
கொக்கிற்கு வெண்மை கொடுத்தவர் யார்?
வானுக்கு நீலம் வழங்கினோர் யார்?
தேனில் இனிமை சேர்த்தவர் யார்?
புளியில் புளிப்பைப் புகுத்தவர் யார்?
பாகலில் கசப்பைப் புகுத்தவர் யார்?
உப்பில் உவர்ப்பை ஊட்டியோர் யார்?
மிளகில் கார்ப்பைக் கலந்தவர் யார்?
சூடும் குளிரும் தந்தவர் யார்?
சூரிய சந்திரர் தந்தவர் யார்?
அவரைக் கடவுள் என்று சொல்வார்
அவரே உலகைப் படைத்தவ ராம்.
அவர்தாம் நம்மையும் படைத்தவ ராம்
அவரைப் போற்றி வழிபடுவோம்.

## எங்கள் தமிழகம்

(கும்மி)

எங்கள் தமிழகம் எங்கள் தமிழகம்
என்றுநான் சொல்கின்ற போதினிலே
என்னுளம் பூரிக்கும் பூரிப்பை யானிங்கே
என்னென்று சொல்லுவேன் தோழிகளே.

வாழ்க்கைக் கிலக்கணம் வகுத்த தமிழகம்
வளத்தினில் ஓங்கிய தமிழகமே
வாழப்பி றந்தநல் தமிழர் கடல்சென்று
வாணிகம் நடத்திய தமிழகமே.

எழுத்துசொல் பொருள்என்னும் இலக்கணம் [இயம்பிடும்
ஈடில்**தொல் காப்பியம்** பெற்றநாடு
பழுதற்ற பாண்டியர் பலகாலம் தமிழைப்
பாராட்டி வளர்த்த தமிழகமே.

சோழன் கரிகாலன் சேரன்செங் குட்டுவன்
போர்ப்புகழ் பெற்ற தமிழகமே
வேழப் படையுடன் வேற்படை யுங்கொண்டு
வீரம் விளைத்த தமிழகமே.

செட்டி மகளுக்குக் காவியம் செய்திட்ட
செந்தமிழ் நாடிது தோழிகளே !
செட்டி ஒருவன் மணிமே கலை என்ற
காவியம் செய்த தமிழகமே.

முதுகினிற் காயம் படாமல் வாவென்ற
முதியவள் வாழ்ந்த தமிழகமே
மூப்பிலும் வாளேந்திப் போர்க்களம் சென்றநல்
மூதாட்டி வாழ்ந்த தமிழகமே.

'மைந்தனைப் பெற்றுத் தருவதிங் கென்கடன்
மறவ னுதல் அவன்கடனே
கைம்மலை எறிதல் காளைக்குக் கடனெ' ன்ற
காரிகை வாழ்ந்த தமிழகமே.

தொண்டையர் கோனிடம் தூதுசென் றஔவை
தோன்றிய திந்தத் தமிழகமே
எண்டிசை யும்புகழ் **திருக்குறள்** செய்திட்ட
வள்ளுவர் வாழ்ந்த தமிழகமே.

எட்டுத் திசையிலும் வெற்றி முழக்கிய
எழில்ராச ராசன் தமிழகமே.
தட்டுத் தடையின்றிக் கப்பல்கள் ஓட்டியே
**கடாரம்** கொண்ட தமிழகமே.

வீரப் படைகொண்டு வெற்றி தனைக்கண்டு
கங்கைநீர் கொண்ட தமிழகமே
வீர ராசேந்திரன் முதலிய சோழர்தம்
வீரத்தைக் கண்ட தமிழகமே.

மலைவ ளங்களும் கலைவ ளங்களும்
மல்கிக் கிடக்கும் தமிழகமே
அலைக டல்வளம் அத்தனை யும்பெறும்
அகலிடம் எங்கள் தமிழகமே.

தமிழ்வ ளர்த்திடத் தமிழினம் வாழ்ந்திடத்
தமிழர்தம் தொண்டிங்குத் தேவையடி
'தமிழர்' என்ற உணர்ச்சிபெற் றிங்கே
தயங்காமல் கடுதொண்டு செய்வமடி.

புத்தக அமைப்பிலே புதுமை!!

எமது புதிய குழந்தை நூல்

கல்வி. கோபாலகிருஷ்ணன் அவர்கள்

எழுதிய

# மணி என்ன?

இந்நூல் முதல் முயற்சியாக கடிகாரம் போன்ற வட்டவடிவில் ஆக்கப்பட்டு நான்கு வண்ண முகப்புடன் வந்துள்ளது.

இது தென்மொழிகள் புத்தக டிரஸ்ட் ஆதரவில் வெளியிடப்பட்டுள்ள குழந்தைப் புத்தகமாகும்.

விலை ரூ. 2.

சாந்தி நூலகம்

2/122. பிராட்வே :: சென்னை-1.


Cover Printed at Ideal Printers, 97, Broadway, Madras-1.